Daily Thanthi
Date:-16.06.2024

### விக்கிரவாண்டி இடைத்தேர்தல்:

## ஓய்வுபெற்ற கிராம நிர்வாக அலுவலர் மனுதாக்கல்

விழுப்புரம், ஜூன்.16-

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (ஜூலை) 10-ந் தேதி நடைபெற உள்ளது. இத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று முன்தினம், விக்கிரவாண்டி சட்டமன்றதொகுதி தேர்தல் அலுவலகமான தாலுகா அலுவலகத்தில் தொடங்கியது. முதல் நாளில் 5 சுயேச்சை வேட்பாளர்கள், வேட்புமனு தாக்கல் செய்தனர். பெரும்பாலும் தேர்தல் சமயத்தில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வேட்புமனு தாக்கல் நடைபெறாது. ஆனால் பக்ரீத் பண்டிகையையொட்டி நாளை(திங்கட்கிழமை) அரசு விடுமுறை என்பதால் நேற்று சனிக்கிழமை என்ற போதிலும் 2-வது நாளாக வேட்புமனு தாக்கல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் வேலூர் மாவட்டம் குடியாத்தம் பகுதியை சேர்ந்த அனைத்து ஓய்வூதியதாரர்கள் கட்சி நிர்வாகியான ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் முனியப்பன் (வயது 74) என்பவர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரான சந்திரசேகரிடம் ரூ.10 ஆயிரம் டெபாசிட் தொகையை செலுத்தி தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். இவரோடு சேர்த்து இதுவரை இத்தொகுதியில் 6 சுயேச்சை வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

Retired village administrative officer nominated in Vikravandi by-election.